# சமூக அபிவிருத்தியில் தொலைக்காட்சியின் தார்மீக பொறுப்பு இன்றைய செல்நெறியை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

மோசஸ் எஸ்

நீண்டகால யுத்தத்திலிருந்து விடுபட்டு மெதுமெதுவாக தம்மை வளப்படுத்திக்கொள்ள முயன்றுகொண்டிருக்கும் எமது சமூகத்தின் அபிவிருத்தி என்பது தனியொரு துறைசார்ந்தது என மட்டுப்படுத்திவிட முடியாது. அது சகல துறை சார்ந்ததாகவும் கட்டமைக்கப்பட வேண்டும். உலகளாவியரீதியில் நோக்கும்போது சமூக அபிவிருத்தியில் ஊடகங்களின் தாக்கம் பாரியளவில் காணப்படுகின்றது. குறிப்பாக கட்புல செவிப்புல சாதனமான தொலைக்காட்சியின் பங்களிப்பு மிகவும் அதிகமானதாகும். இவ்வாறானதொரு சூழலில் சமூக இயங்கியல் சாதனங்களில் முக்கியமானதொன்றாக மாறிவிட்ட தொலைக்காட்சி தொடர்பான விமர்சனங்களும் விவாதங்களும் ஆய்வுகளும் பல மட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக ஊடகவியல், சமூகவியல், உளவியல், மானிடவியல், பண்பாட்டியல் போன்றவற்றில் இத்தகைய ஆய்வுகள் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன.

அவற்றினூடாக இதனது துரித வளர்ச்சிப்போக்கை மட்டுமின்றி இதனால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்தும் பேசப்படுகின்றன. அத்தகைய கொள்கை மற்றும் கோட்பாடுகளுக்கமைய துரித அபிவிருத்தியை வேண்டி நிற்கும் எமது சமூகத்தினர் எவ்வாறான சாதக, பாதக தாக்கங்களை எவ்வெவ் வழிகளில் எதிர் கொள்கின்றார்கள் என்ற ஆய்வை மேற்கொள்ளவேண்டிய தேவை யுள்ளது. இலங்கை தொலைக்காட்சி அலைவரிசைகளில் குறிப்பாக உள்நாட்டு அலைவரிசை களில் ஒளிபரப்பாகும் அதிகமான தமிழ் நிகழ்ச்சிகளை எமது ஆய்வுக்குட்படுத்தினோம். அவற்றில் 85 வீதமானவை களிப்பூட்டும் நிகழ்ச்சிகளாகவே காணப்படுகின்றன.

ஆகவே, இவ்வாறானதொரு இருளை நோக்கும் வழி முறைகளை தொலைக்காட்சிகளின் ஊடாக வெளிப்படுத்துவதை தவிர்த்து ஓர் உன்னதமான, ஒழுக்கம் நிறைந்த எதிர்கால சந்ததியினரை கட்டியெழுப்பும் நோக்குடன் தொலைக்காட்சி செயற்பட வேண்டிய தார்மீக கடமை அவசியமாகும். எனவே இது அமைதியான சூழல், வளர்ச்சி, சந்தோசமான வாழ்க்கை, மனித நேயம் போன்ற விடயங்களை வெளிக்காட்ட வேண்டும். இதன் மூலம் சமூகத்தினையும் தனிநபர் நடத்தை முறைகளையம் நல்ல முறையில் மாற்றியமைக்க முடியும்.

ஆய்வுகளின் அடிப்படையில் எம்மால் பெறப்பட்டுள்ள தரவுகளின்படி அபிவிருத்தியை எதிர்நோக்கும் எமது சமூகம் குறிப்பிட்ட பிரச்சினைகளிலிருந்து மீள்வதற்கு இதனை பயன்படுத்தும் எம்மவர்களும் தொலைக்காட்சியாளரும் அரசும் அதுசார்ந்தோரும் தார்மீகப் பொறுப்புடன் எவ்வகையில் செயலாற்ற வேண்டும் என்ற ஆலோசனைகளையும் அதுசார்ந்த பரிந்துரைகளையும் முன்வைப்பதுடன் செயல்வடிவத்துக்கான தீர்வுகளையும் கொண்டதாக இவ்வாய்வுக்கட்டுரை அமைகிறது.

**திறவுச் சொற்கள்:** சமூக அபிவிருத்தி, தொலைக்காட்சி, செல்நெறிகள், ஊடகங்கள்

ஊடகத்துறை, ரூபவாஹிக் கூட்டுத்தாபனம் E-mail: stanimoses@yahoo.com